CS Vasudevan Gopu

Company Secretary
Insolvency Professional
Registered Valuer
Social Auditor

FORM A

**PUBLIC ANNOUNCEMENT**

*(Regulation 14 of the Insolvency and Bankruptcy Board of India (Voluntary Liquidation Process) Regulations, 2017)*

**FOR THE ATTENTION OF THE STAKEHOLDERS OF SELVA HERBALS LIMITED**

| | | |
|---|---|---|
| 1. | NAME OF THE CORPORATE PERSON | Selva Herbals Limited |
| 2. | DATE OF INCORPORATION OF CORPORATE PERSON | 08 April 2002 |
| 3. | AUTHORITY UNDER WHICH CORPORATE PERSON IS INCORPORATED / REGISTERED | Registrar of Companies, Coimbatore |
| 4. | CORPORATE IDENTITY NUMBER OF CORPORATE PERSON | U51100TZ2002PLC010141 |
| 5. | ADDRESS OF THE REGISTERED OFFICE AND PRINCIPAL OFFICE (IF ANY) OF CORPORATE PERSON | S F No:348/3, Karadimadai Mathipalayam (PO), Coimbatore, TamilNadu, India, 641010. |
| 6. | LIQUIDATION COMMENCEMENT DATE OF CORPORATE PERSON | **23 September 2026** |
| 7. | NAME, ADDRESS, EMAIL ADDRESS, TELEPHONE NUMBER AND REGISTRATION NUMBER OF THE LIQUIDATOR | Name: Vasudevan Gopu<br>Address: G.V. enclave, 18/30, Ramani Street, K.K. Pudur, Saibaba Colony (4th right opp. Road to Saibaba Colony Hotel Annapoorna Road), Coimbatore – 641038, Tamil Nadu, India.<br>Email: vasudevangopu.ip@gmail.com, vasudevanacs@gmail.com<br>Telephone No. 0422-4347063<br>Registration No. IBBI/IPA-002/IP-N00291/2017-18/10849 |
| 8. | LAST DATE FOR SUBMISSION OF CLAIMS | **23 October 2026** |

Notice is hereby given that Selva Herbals Limited has commenced voluntary liquidation on **23 September 2026.**

The stakeholders of Selva Herbals Limited are hereby called upon to submit a proof of their claims, on or before **23 October 2026** to the liquidator at the address mentioned against item 7.

The financial creditors shall submit their proof of claims by electronic means only. All other stakeholders may submit the proof of claims in person, by post or by electronic means.

Submission of false or misleading proofs of claim shall attract penalties.

VASUDEVAN GOPU
Reg. No. IBBI/IPA-002/IP-N00291/2017-18/10849
Insolvency Professional

**Vasudevan Gopu**
**Liquidator of Selva Herbals Limited**
**Registration No: IBBI/IPA-002/IP-N00291/2017-18/10849**
**AFA No: AA2/10849/02/300627/204281 valid till 30.06.2027**

**Date: 25-09-2026**
**Place: Coimbatore**

**FORM A**
**PUBLIC ANNOUNCEMENT**
[Regulation 14 of the Insolvency and Bankruptcy Board of India (Voluntary Liquidation Process) Regulation 2017]
**FOR THE ATTENTION OF THE STAKEHOLDERS OF**
## SELVA HERBALS LIMITED

| | | |
|---|---|---|
| 1. | Name of Corporate Person | **Selva Herbals Limited** |
| 2. | Date of Incorporate of Corporate Person | 08 April 2002 |
| 3. | Authority under which Corporate Debtor is incorporated / registered | Registrar of Companies, Coimbatore |
| 4. | Corporate Identity Number | U51100TZ2002PLC010141 |
| 5. | Address of the Registered Office and Principal Office (If Any) of Corporate Person. | S F No:348/3, Karadimadai Mathipalayam (PO), Coimbatore, TamilNadu, India, 641010. |
| 6. | Liquidation Commencement Date of Corporate Person | **23 September 2026** |
| 7. | Name, Address, eMail Address, Telephone Number and the Registeration Number of the Liquidation | Name: VASUDEVAN GOPU<br>Address: G.V. Enclave, 18/30, Ramani Street, K.K.Pudur, Saibaba Colony (4th Right Opp. Road to Saiababa Colony, Hotel Annapoorna Road) Coimbatore - 641 038, Tamil Nadu, India.<br>Email: vasudevangopu.ip@gmail.com; vasudevanacs@gmail.com<br>Telephone No: 0422-4347063<br>Reg. No. : IBBI/IPA-002/IP-N00291/2017-18/10849 |
| 8. | Last Date Of Submission Of Claims | **23 October 2026** |

Notice is hereby given that Selva Herbals Limited has commenced voluntary liquidation on **23 September 2026.**
The stakeholders of Selva Herbals Limited are hereby called upon to submit a proof of their claims, on or before **23 October 2026** to the liquidator at the address mentioned against item 7.
The financial creditors shall submit their proof of claims by electronic means only. All other stakeholders may submit the proof of claims in person, by post or by electronic means.
Submission of false or misleading proofs of claim shall attract penalties.

VASUDEVAN GOPU
Liquidator of Selva Herbals Limited
Registration No: IBBI/IPA-002/IP-N00291/2017-18/10849
AFA No: AA2/10849/02/300627/204281 valid till 30.06.2027

Date : 25.09.2026
Place : Coimbatore

## PUBLIC NOTICE

This notice is being issued by Mr. Nishad Jitendra Shah (Acquirer-1), M/s. Nishad Jitendra Shah HUF (Acquirer-2), Ms. Rajshree Nishad Shah (Acquirer-3), Mr. Parshwa Nishad Shah (Acquirer-4), Ms. Payal Paras Shah (Acquirer-5), M/s. Trupti Management Services Private Limited (Acquirer-6), M/s. Rocksolid Investments (Acquirer-7), M/s. Rocksolid Enterprise (Acquirer-8) and M/s. Rockthree Framework LLP (Acquirer-9) (collectively referred to as the "Acquirers"), in connection with the proposed acquisition of control and shareholding in RGF Capital Markets Limited (the "Company" or "Target Company"), in accordance with the applicable provisions of the Master Direction – Reserve Bank of India (Non-Banking Financial Companies – Acquisition of Shareholding or Control) Directions, 2025 dated November 28, 2025.

**Name and Address of the Acquirers:**

| Acquirer | Address |
|---|---|
| Mr. Nishad Jitendra Shah (Acquirer-1) | 44, Raj Residency, Nr. Shalin Bungalow, Shilaj, Thaltej, Ahmedabad, Gujarat – 380059; Tel.: +91-9265345775; Email: trupti_njshah@yahoo.com |
| M/s. Nishad Jitendra Shah HUF (Acquirer-2) | 44, Raj Residency, Nr. Shalin Bungalow, Shilaj, Thaltej, Ahmedabad, Gujarat – 380059; Tel.: +91-9265345775; Email: trupti_njshah@yahoo.com |
| Ms. Rajshree Nishad Shah (Acquirer-3) | 44, Raj Residency, Nr. Shalin Bungalow, Shilaj, Thaltej, Ahmedabad, Gujarat – 380059; Tel.: +91-9265345775; Email: trupti_njshah@yahoo.com |
| Mr. Parshwa Nishad Shah (Acquirer-4) | 44, Raj Residency, Nr. Shalin Bungalow, Shilaj, Thaltej, Ahmedabad, Gujarat – 380059; Tel.: +91-9265345775; Email: parshwashah79@gmail.com |
| Ms. Payal Paras Shah (Acquirer-5) | 201, Bouganvilla Apartment, Nr. Panchamrut Bunglow, Thaltej, Ahmedabad, Gujarat – 380054; Tel.: +91-9265345775; Email: trupti_ppshah@yahoo.com |
| M/s. Trupti Management Services Private Limited (Acquirer-6) | 44, GHB Complex, Ankur Road, Naranpura, Ahmedabad, Gujarat – 380013; Tel.: +91-9265345775; Email: truptimanagement@gmail.com |
| M/s. Rocksolid Investments (Acquirer-7) | Office/Shop No. 44, GHB Complex, Ankur Road, Naranpura, Ahmedabad, Gujarat – 380013; Tel.: +91-9265345775; Email: rocksolid.inv1@gmail.com |
| M/s. Rocksolid Enterprise (Acquirer-8) | Office/Shop No. 44, GHB Complex, Ankur Road, Naranpura, Ahmedabad, Gujarat – 380013; Tel.: +91-9265345775; Email: rocksolid.enterprise1@gmail.com |
| M/s. Rockthree Framework LLP (Acquirer-9) | 402, Zion Prime, Nr. Four Pole Structure, Thaltej, Daskroi, Ahmedabad, Gujarat – 380059; Tel.: +91-9265345775; Email: rockthree.framework@gmail.com |

**Background of the Target Company**

RGF Capital Markets Limited ("RGF" or the "Company") was incorporated on April 4, 1983, under the name Dhanpati Commercial Limited. Subsequently, the name of the Company was changed to Realgrowth Financial Service Limited and thereafter to RGF Capital Markets Limited on January 4, 1996. The Company is registered with the Reserve Bank of India ("RBI") as a Non-Banking Financial Company ("NBFC") under RBI Registration No. 05.00255, issued by the RBI, Calcutta, vide certificate dated February 21, 1998. The registered office of the Company is situated at 14, 2nd Floor, N.S. Road, Kolkata, West Bengal – 700001, India. The equity shares of the Company are listed on BSE Limited and the Calcutta Stock Exchange Limited.

**Proposed Acquisition**

As on the date of this Notice, the Acquirers collectively hold 2,08,65,708 fully paid-up Equity Shares of Re. 1/- each in the Company, representing 13.91% of the paid-up equity share capital of the Company. The Acquirers have entered into a Share Purchase Agreement dated March 10, 2026 with the existing promoter(s)/selling shareholder(s) of the Company for acquisition of 3,74,69,556 fully paid-up Equity Shares of Re. 1.00/- each, representing 24.98% of the paid-up equity share capital and voting equity share capital of the Company, at an agreed price of Rs. 0.82/- per Equity Share, aggregating to Rs. 3,07,25,036/-. Further, the Board of Directors of the Company, at its meeting held on March 10, 2026, approved the issue of 50,00,00,000 warrants on a preferential basis at an issue price of Rs. 1.00/- per warrant, of which the Acquirers propose to acquire upto 18,70,48,796 warrants, each warrant being convertible into one Equity Share of the Company, subject to receipt of the requisite statutory and regulatory approvals. Pursuant to Regulations 3(1) and 4 of the SEBI (Substantial Acquisition of Shares and Takeovers) Regulations, 2011, as amended, the Acquirers have made a mandatory open offer to the public shareholders of the Company to acquire up to 3,90,06,240 Equity Shares, representing 26.00% of the paid-up equity share capital of the Company, at an offer price of Rs. 1/- per Equity Share, payable in cash.

Furthermore, following SEBI's approval of the Draft Letter of Offer dated June 11, 2026, the Promoter Sellers of the Target Company have sold 1,19,88,656 Equity Shares, representing 7.99% of the Target Company's fully paid-up equity and voting share capital, through open market transactions. As a result, the Equity Shares available for acquisition by the Acquirers under the SPA were reduced from 3,74,69,556 (24.98%) to 2,54,80,900 (16.98%). The Acquirers and the remaining Sellers have mutually agreed to remain bound by the SPA with respect to the remaining 2,54,80,900 Equity Shares.

Upon consummation of the proposed acquisition, the Acquirers would be classified as "Promoters" of the Company in accordance with the applicable law.

**Rationale of Proposed Acquisition**

The proposed acquisition is intended to acquire effective management and control of the Company and to continue its existing business as an NBFC. The Acquirers may explore diversification of business activities in future, subject to necessary approvals. The Acquirers intend to expand the Company's business activities as an NBFC, strengthen its Board, drive growth in revenue and profitability and raise additional capital through suitable routes, with approval of the appropriate authorities.

**RBI Approval**

The RBI, vide letter dated September 24, 2026 (bearing reference no. KOL.DOR.NO.S1089/01-01-001/2026-27), has approved the proposed increase in shareholding of the Acquirers in accordance with Paragraph 6 of the Master Direction – Reserve Bank of India (Non-Banking Financial Companies – Acquisition of Shareholding or Control) Directions, 2025 dated November 28, 2025, bearing reference no. Master Direction DOR.HOL.REC.259/16.13.100/2025-26. The approval is subject to compliance with the conditions specified therein. The completion of the Proposed Acquisition will also result in a change of management of RGF Capital markets Limited.

Additionally, the RBI has also approved the proposed change in management of the Company and has accorded its approval for the appointment of **Mr. Nishad Jitendra Shah (DIN: 00357197) and Mrs. Rajshree Nishad Shah (DIN: 01267034) as Directors of the Company**, subject to the terms and conditions specified in the RBI approval letter and applicable statutory and regulatory requirements.

Any clarifications and/ or objections in this regard may be sent to the Acquirers within 30 (thirty) days from the date of this notice, addressed to Mr. Nishad Jitendra Shah – Authorized Signatory, at the above mentioned address of the Acquirers or email at: trupti_njshah@yahoo.com.

**For and on behalf of the Acquirers**
**Sd/-**
**Mr. Nishad Jitendra Shah**
**Acquirer-1**

**Date:** September 24, 2026
**Place:** Ahmedabad

## PUBLIC NOTICE

ICICI Home Finance | Registered Office: ICICI Bank Towers, Bandra-Kurla Complex, Bandra (East), Mumbai- 400051
Corporate Office: ICICI HFC Tower, JB Nagar, Andheri Kurla Road, Andheri East, Mumbai- 400059
Branch Address: 1st floor, Prasad Arcade, Building No. 28 / 127 / 5, Patturakkal Junction, Shornur Road, Thrissur - 680022

The following borrower/s have defaulted in the repayment of principal and interest of the loans facility obtained by them from ICICI Home Finance Company Limited ("ICICI HFC") and the loans have been classified as Non-Performing Assets (NPA). A notice was issued to them under Section 13 (2) of Securitisation and Re-construction of Financial Assets and Enforcement of Security Interest Act-2002 on their last known addresses, however it was not served and hence they are hereby notified by way of this public notice.

| Sr. No. | Name of the Borrower/ Co-Borrower/ Guarantor/ (Loan Account Number) & Address | Property Address of Secured Asset/ Asset to be Enforced | Date of Notice Sent/ Outstanding as on Date of Notice | NPA Date |
|---|---|---|---|---|
| 1. | Now Shad (Borrower), Ramseena A (CO-Borrower) , Kunjuinjaravila Kizhakkathil, Vadakkumthala Kollam KERALA 690536, LHTHR00001610098 | 74/67 Aluva East Village, Edathala Grama Panchayath, Pushpa Nager Edathala Sy No 939/1 Re Sy No 74/67 Cochin 683561 Kerala Bounded By - North By : Property Of Varghese ,south By : Panchayath Road, East By : Property Of Rasheed, West By : Property Sold By Lenin. | 12-09-2026 Rs. 23,29,477.34/- | 08-09-2026 |

The steps are being taken for substituted service of notice. The above borrower/s and/or their guarantors (as applicable) are advised to make the payments of outstanding within period of 60 days from the date of publication of this notice else further steps will be taken as per the provisions of Securitization and Re-construction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002.

Date: September 25, 2026, Place: Cochin — Authorized Officer, ICICI Home Finance Company Limited

## MUTHOOT HOUSING FINANCE COMPANY LIMITED

Muthoot Housing Finance
**Registered Office: TC NO.14/2074-7, Muthoot Centre, Punnen Road, Thiruvananthapuram - 695 034, CIN NO – U65922KL2010PLC025624. Corporate Office: 12/A 01, 13th floor, Parinee Crescenzo, Plot No. C38 & C39, Bandra Kurla Complex-G block (East), Mumbai-400051 TEL. NO: 022-62728517, Email Id: authorised.officer@muthoot.com**

**APPENDIX -IV [Rule 8(1)] Possession Notice (For Immovable Property)**

Whereas The undersigned being the Authorized Officer of the Muthoot Housing Finance Company Ltd., under the Securitisation And Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (ACT NO.54 OF 2002) and in exercise of powers conferred under section 13(12) read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules, 2002 issued a demand notice to below mentioned Borrower/s / Guarantor/s. After completion of 60 days from date of receipt of the said notice, The Borrower/s / Guarantor/s having failed to repay the amount, notice is hereby given to the Borrower/s / Guarantor/s and the public in general that the undersigned has taken Symbolic Possession of the property described herein below in exercise of powers conferred on them under section 13(4) of the said Act read with Rule 8 of the said Rules on this.

| Sr. No. | LAN / Name of Borrower / Co-Borrower / Guarantor | Date of Demand notice | Total O/s Amount (Rs.) Future Interest Applicable | Date of Possession |
|---|---|---|---|---|
| 1 | LAN No. MHFLPROCOC000005023984<br>1. Ajimon C B, 2. Babu Madhavan, 3. Jancy Larios | 11-June-2026 | Rs.13,81,543.00/- as on 11-June-2026 | 23-September-2026 |
| | **Description of Secured Asset(s) /Immovable Property (ies):** ALL THAT PART AND PARCEL OF PROPERTY BEING EXTENT 3.64 & 7.69 (11.33) ARES RE SY NO: 116/10/2, 116/8/2, OLD SY NO: 285/5/3/13, MARARIKULAM VILLAGE, CHERTHALA TALUK, MARARIKULAM NORTH PANCHAYATH, MARARIKULAM SUB DISTRICT, ALAPPUZHA DISTRICT, KERALA – 688582 BOUNDED BY: 3.64 ARES EAST : PROPERTY OF REJI RAGHAVAN SOUTH: PROPERTY OF BIJU WEST: PROPERTY BELONGS TO MYSELF NORTH: PROPERTY OF BABU BOUNDED BY: 7.69 ARES EAST: PROPERTY BELONGS TO MYSELF SOUTH: PROPERTY OF RAJAPPAN, BINU WEST : PROPERTY OF MANIYAMMA, CHANDRIKA, PANCHAYATH ROAD NORTH : PROPERTY OF RAGHAVAN | | | |

The Borrower/s / Guarantor/s in particular and the public in general is hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of the Muthoot Housing Finance Company Limited, for an above mentioned demanded amount and further interest thereon.

**Place: KERALA, Date: 25 September, 2026** — **Sd/- Authorised Officer - For Muthoot Housing Finance Company Limited**


Navigate
the market's
twists and turns

Take a deep dive into a stock or sector with Compass in Business Standard, and gain insights into the trends, triggers, and shifts that could shape market movements ahead.



Business Standard
Insight Out

To book your copy, SMS **reachbs** to **57575** or email **order@bsmail.in**

businessstandard | bsindia | business.standard | business-standard | business-standard.com

13 நாட்களுக்கு பிறகு பரிசல் இயக்க அனுமதி

# ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 5,000 கனஅடியாக நீடிப்பு

**மேட்டூர், செப். 25-** கர்நாடக மாநிலம் கபினி மற்றும் கே.ஆர்.எஸ் அணைகளில் இருந்து திறக்கப்படும் உபரி நீர் மற்றும் இருமாநில எல்லையில் பெய்யும் மழையை பொறுத்து, ஒகேனக்கல் காவிரி மற்றும் மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது. ஒகேனக்கல் காவிரியில் நேற்று 5,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து இன்று காலையும் அதே அளவில் நீடிக்கிறது. கடந்த 13 நாட்களாக பரிசல் இயக்க தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், மாவட்ட நிர்வாகம் இன்று தடையை நீக்கியது. இதனால், சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரியின் அழகை ரசித்தனர்.

மேட்டூர் அணைக்கு நேற்று 5,039 கனஅடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை 4,116 கனஅடியாக சரிந்தது. டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 12,400 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. நீர்வரத்தை காட்டிலும், திறப்பு அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று 82.86 அடியாக இருந்த அணை நீர்மட்டம் இன்று காலை 82.36 அடியாக சரிந்தது. நீர் இருப்பு 44.35 டிஎம்சியாக உள்ளது.

# பழுதாகிநின்ற லாரி மீது பைக் மோதி ஆர்ஐ பலி

**உடன்குடி, செப். 25-** தூத்துக்குடி மாவட்டம் பழையகாயல் கச்சேரி தெருவை சேர்ந்தவர் அமிர்தகண்ணன் (41). திருச்செந்தூர் தாசில்தார் அலுவலகத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார். நேற்று முன்தினம் இரவு திருச்செந்தூரில் தனது அரசு பணிகளை முடித்துவிட்டு, பைக்கில் வீட்டிற்கு திரும்பிக்கொண்டிருந்தார்.

ஆறுமுகநேரி அருகே தண்ணீர்பந்தல் பாலம் பகுதியில் வந்தபோது, சாலையில் பழுதாகி நின்றிருந்த லாரியின் பின்புறம் இவரது பைக் மோதியது. இதில் பலத்த காயமடைந்தவரை அப்பகுதியினர் மீட்டு சிகிச்சைக்காக ஆத்தூர் தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், அமிர்தகண்ணன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து புகாரின்பேரில் குரும்பூர் போலீசார் வழக்குப்பதிந்து லாரி டிரைவரான பழையகாயல் புதுக்கிராமத்தைச் சேர்ந்த சக்கையாவிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சாதி, மதம், இனம், மொழிக்கு அப்பாற்பட்டு செயல்படுகிறோம்

# வணிகர்களை அச்சுறுத்தினால் பேரமைப்பு நடவடிக்கை எடுக்கும்

## விக்கிரமராஜா பேட்டி



**தூத்துக்குடி, செப். 25-** வணிகர்களை அச்சுறுத்தினால் வணிகர் சங்க பேரமைப்பு நடவடிக்கை எடுக்கும் என்று அதன் தலைவர் விக்கிரமராஜா கூறினார்.

தூத்துக்குடியில் நேற்று அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி: தூத்துக்குடி நகைக்கடை விவகாரத்தில் போலீசார் வழக்கு பதிந்து நடவடிக்கைஎடுத்து வருகின்றனர். சாதி, மதம், மொழி, இனம் ஆகியவற்றிற்கு உட்படாமல் வணிகர்கள் என்ற அடிப்படையில் வணிகர் சங்க பேரமைப்பு செயல்பட்டு வருகிறது. வணிகர்களுக்கு ஏதாவது அச்சுறுத்தல் என்றால் வணிகர் சங்க பேரமைப்பு வேடிக்கை பார்க்காமல் நடவடிக்கை எடுக்கும்.

நகைக்கடை விவகாரத்தை சாதிய உணர்வோடு பேசுவதாக செய்திகள் வருகிறது. அவ்வாறு பார்க்க வேண்டாம். வணிக நிறுவனமாக பார்க்க வேண்டும். வணிகர்களுக்கு பாதிப்பு என்று சொன்னால் பாதுகாப்பதற்கு தான் சங்கம். அதில் நியாயம் இல்லை என்று சொன்னால் வணிகராக இருந்தால் கூட நாங்கள் தட்டிக் கேட்க தயாராக இருக்கிறோம்.

மேலும் சம்பந்தப்பட்ட நகை அடகு நிறுவனம் மீதும் தமிழகம் முழுவதும் குறை கூறுகின்றனர். அதை தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு ஆய்வு செய்ய இருக்கிறது. அதே வேளை அடகு வைத்த நகையை மிரட்டி திருப்பி வைப்பதாகவும் தகவல் வந்துள்ளது. எனவே இந்நிறுவனத்தை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு உறுதியாக உள்ளது. எங்கள் நடவடிக்கையை சட்டப்படிதான் செய்துள்ளோம். யாராக இருந்தாலும் சட்டப்படி எதிர்கொண்டு இருந்தால் அதற்கு பதில் சொல்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம், என்றார்.

# தமிழகத்தில் தொடரும் மின்வெட்டால் கடும் பாதிப்பு

## தேமுதிக பிரேமலதா விஜயகாந்த் பேட்டி

**விருத்தாசலம், செப். 25-** கடலூர் மாவட்டம் விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொள்வதற்காக தேமுதிக பொதுச்செயலாளரும், எம்எல்ஏவுமான பிரேமலதா விஜயகாந்த், விருத்தாசலத்தில் நேற்று பொதுமக்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்றார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

விருத்தாசலத்தை தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். ஏழை மக்கள் நம்பியிருக்கும் 100 நாள் வேலைத் திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகப் புகார்கள் வருகின்றன. இதில் பாரபட்சமின்றி அனைவருக்கும் சமமாகப் பணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அரசு புதிய திட்டங்களுக்கான நிதிகளை முறையாக ஒதுக்க வேண்டும். நிதி இல்லாமல் உள்ளாட்சி அமைப்புகளால் எந்தப் பணிகளையும் செய்ய முடியவில்லை. விருத்தாசலம் நகரின் முக்கியப் பகுதியான கடலூர் சாலையில் பள்ளிகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் உழவர் சந்தை உள்ள இடத்தில் 4 டாஸ்மாக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதனால் கடும் போக்குவரத்து நெரிசலும், பொது மக்களுக்கு இடையூறும் ஏற்படுவதால், அவற்றை உடனடியாக நகருக்கு வெளியே மாற்ற வேண்டும்.

நெல் அதிகம் விளையும் இப்பகுதியில் திறந்தவெளியில் வைக்கப்படும் நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாகின்றன. எனவே, எனது தொகுதி வளர்ச்சிப் பணிகளுக்காக எனக்கு ஒதுக்கப்படும் கார் வசதி வேண்டாம் என்று எழுதி கொடுத்துவிட்டு வந்துள்ளேன். அதற்கு பதிலாக விவசாயிகள் விளைவிக்கும் நெல்லை பாதுகாக்க நிரந்தர நெல் சேமிப்புக் கிடங்குகளை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று அரசுக்கு வலியுறுத்தியுள்ளேன்.

தமிழகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள தொடர் மின்வெட்டு மற்றும் மின் கட்டண உயர்வு சிறுதொழில்களையும், பொது மக்களையும் கடுமையாக பாதித்துள்ளது. இதற்கு தீர்வாக அரசு வீடுகள்தோறும் சோலார் மின் உற்பத்தி திட்டங்களை ஊக்குவிக்க வேண்டும்.

தொழிலதிபர் வீரமணி தொடர்பான சர்ச்சைகள் மற்றும் பாலியல் புகார்கள் தமிழகத்திற்கே பெரும் தலைகுனிவை ஏற்படுத்தி உள்ளன. இதில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு பின்னணியில் யார் இருந்தாலும் பாரபட்சமின்றி சட்டம் தன் கடமையைச் செய்ய வேண்டும். தவறு செய்தவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இதுசம்பந்தமாக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் அதிரடி

# சேலத்தில் ஜெம் வீரமணி வீடு, நிறுவனத்தில் சோதனை

**சேலம், செப். 25-** சேலத்தில் ஜெம் வீரமணிக்கு சொந்தமான வீடு, கிரானைட் நிறுவனத்தில் சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் சோதனை மேற்கொண்டனர்.

ஜெம் கிரானைட் அதிபர் வீரமணி, சிறுமிகளிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டதாக கூறப்பட்ட புகாரின்பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மீது போக்சோ சட்டம் பாய்ந்துள்ளது. மேலும் அவர் மீது தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இந்த வழக்கு தொடர்பாக வீரமணியின் வீடு மற்றும் அலுவலகங்களில் போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர். அவருக்கு தொடர்புடைய நிறுவனங்களிலும் சோதனை மற்றும் விசாரணை நடந்து வருகிறது.

இவ்வழக்கை விசாரித்து வரும் சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் சேலத்தில் முகாமிட்டுள்ளனர். அவர்கள் நேற்று சேலம் கொண்டலாம்பட்டி பட்டர்பிளை பாலம் அருகில் உள்ள காவேரி ஸ்டோன்ஸ் இம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு வந்தனர். 5க்கும் மேற்பட்ட போலீசார், அந்த நிறுவனத்தில் சோதனை மேற்கொண்டனர். சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக இந்த சோதனை நடந்தது. இந்த காவேரி நிறுவனம், ஜெம் வீரமணியின் இணை நிறுவனம் என கூறப்படுகிறது. இந்த சோதனையை முடித்துக்கொண்ட போலீசார், தொடர்ந்து சேலத்திலேயே முகாமிட்டுள்ளனர்.

இதேபோல், சேலம் 5 ரோடு அருகில் உள்ள ஸ்டேட் பேங்க் காலனியில் ஜெம் வீரமணியின் வீடு இருக்கிறது. இங்கு வந்த சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் சோதனை மேற்கொண்டனர்.

இந்த வீட்டிற்கு வீரமணி அடிக்கடி வந்து செல்வதாக சொல்லப்படுகிறது. இதையடுத்து ஒவ்வொரு அறையாக சென்ற போலீசார், தீவிர விசாரணை மேற்கொண்டனர். அங்கிருந்த கணினி மென்பொருட்கள் மற்றும் ஆவணங்களை எடுத்து சென்றனர். இந்த சோதனை சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக நடந்தது.

# மகன் சரிவர கவனிக்காததால் மூத்த தம்பதிகள் தற்கொலை



**காட்டுமன்னார்கோவில், செப். 25-** கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் காளியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் லோகநாதன் (88). இவரது மனைவி கஸ்தூரி (78). இவர்களுக்கு சரவணன் (58) என்ற மகனும், ஒரு மகளும் உள்ளனர். மகளுக்கு திருமணமாகி கள்ளக்குறிச்சியில் வசித்து வருகிறார். காட்டுமன்னார்கோவில் நகரப்பகுதியில் சரவணன், பெட்டிக்கடை நடத்தி வருகிறார். மேலும் சரவணன், அதே தெருவில் தனியாக வசித்து வருகிறார். இதனால் சொந்த வீட்டில் சரவணனின் பெற்றோர் வசித்தனர். வயது மூத்த தம்பதியான லோகநாதன், கஸ்தூரி ஆகியோர் உயர் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டு வந்த நிலையில் அவர்களை மகன் சரியாக கவனிப்பதில்லை என தெரிகிறது.

இதனிடையே நேற்று முன்தினம் இரவு வழக்கம்போல் தம்பதியினர் உறங்க சென்றுள்ளனர். அப்போது வாழ பிடிக்காமல் மன உளைச்சலில் தூக்க மாத்திரை சாப்பிட்டதாக தெரிகிறது. நேற்று சரவணனின் மனைவி லதா, வீட்டில் இருந்த லோகநாதன் மற்றும் கஸ்தூரியை எழுப்பியுள்ளார். அப்போது இருவரும் எழுந்திருக்காமல் மயங்கிய நிலையில் கிடக்கவே, தனது கணவருக்கு அவர் தகவல் தெரிவித்துள்ளார். உடனடியாக வீட்டுக்கு வந்த சரவணன், அக்கம் பக்கத்தினர் உதவியுடன் இருவரையும் மீட்டு சிதம்பரம் அரசு மருத்துவமனையில் இருவரும் சேர்க்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதுகுறித்து காட்டுமன்னார்கோவில் போலீசார் விசாரணை நடத்தினர். அதில், இருவரும் அளவுக்கு அதிகமாக தூக்க மாத்திரை சாப்பிட்டது தெரியவந்தது. மேலும் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.


## ட்ரூஹோம் நிதி லிமிடெட்

(முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட் என அறியப்பட்டது)

Truhome FINANCE

**பதிவு அலுவலகம்:** ஸ்ரீநிவாசா டவர், முதல் தளம், கதவு எண்.5, பழைய எண்.11, 2வது லேன், செனடாப் சாலை, ஆழ்வார்பேட்டை, தேனாம்பேட்டை, சென்னை-600018

**தலைமை அலுவலகம்:** நிலை-3, வோக்ஹார்ட்த் டவர்ஸ், கிழக்கு விங் C-2, G பிளாக், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை-400 051

**இணையதளம்:** http://www.truhomefinance.in

### கையக சுவாதீன அறிவிப்பு

இவ்வாறிருக்க, கீழே கையொப்பமிட்டவர் ட்ரூஹோம் நிதி லிமிடெடின் (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்) அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (மேற்கூறிய சட்டம்) விதிமுறைகளின் 2002 இல் 54 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (மேற்கூறிய விதிகள்) இன் விதி 3 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே அட்டவணையில் விவரங்கள் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்புகள் வழங்கி மேற்கூறிய கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ளத் தொகையைத் 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறுக் கோரியிருந்தார்.

கடன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர், இதன்மூலம் கடன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரி, அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ், பாதுகாப்பு நலன் அமலாக்க விதிகள்,2002 இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை, இந்த **21,22,23 ம் தேதி செப்டம்பர் 2026 ம் ஆண்டு** கையக சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரருக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்கு பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் இங்கே கீழே குறிப்பிட்டத் தொகைக்காக அதற்குரிய வட்டியுடன் ட்ரூஹோம் நிதி லிமிடெடின் (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்) வசூலுக்கு உட்படும்.

கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு, கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்-பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

**கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி**

**திருமதி. பிரியா க/பெ. திரு. செல்ல கருப்பு**
**எண்.1/2 பூஜா காம்ப்ளக்ஸ், சிவாஜி காலனி தடாகம் பிரதான சாலை, இடையர்பாளையம் கோயம்புத்தூர் - 641025**
**திரு. செல்லகருப்பு**
**எண்.1/2 பூஜா காம்ப்ளக்ஸ், சிவாஜி காலனி தடாகம் பிரதான சாலை, இடையர்பாளையம் கோயம்புத்தூர் - 641025**

**கோரிக்கை அறிவிப்பின்படி செலுத்த வேண்டிய தொகை**

ரூ. 8138746/- (ரூபாய் எண்பத்தொன்று லட்சத்து முப்பத்து எட்டாயிரத்து எழுநூற்று நாற்பத்தாறு மட்டும்) 07-05-2025 தேதியன்று கடன் கணக்கு எண். SHLHCOIM0001859 இன் தொடர்பாக மேலும் வட்டியுடன் குறிப்பிடப்பட்டுள்ள தற்செயலான செலவுகள், கட்டணங்கள் போன்றவை. கோரிக்கை அறிவிப்பு தேதி - 09.05.2025, கையக சுவாதீன தேதி - 21.09.2026

**அடமானச் சொத்தின் விவரம்**

அனைத்து துண்டு மற்றும் பகுதி கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மதுக்கரை துணைப் பதிவு மாவட்டம், கோவை தெற்கு தாலுகா, தற்போது மதுக்கரை தாலுகாவில், மதுக்கரை கிராமம், S.F. எண்.954/1 ல் உள்ள நிலம் வீட்டு மனையாக மாற்றப்பட்டு இதில் மனை எண்.35 பகுதியில் சொத்து அமைந்துள்ளது.
பொருள் எண்.1: மேற்கு: ரூபன் சந்திரகுமார் வீடு, வடக்கு:20 அடி கிழக்கு மேற்கு சாலை தெற்கு:கிரேசி செல்வகுமாரி சொத்து, கிழக்கு: ஷாகுல் ஹேமாதேவி மற்றும் பிறர் சொத்து சொத்தின் பரப்பளவு 871 சதுர அடி
பொருள் எண்.2: மேற்கு: 10 அடி தெற்கு வடக்கு சாலை, வடக்கு:20 அடி கிழக்கு மேற்கு சாலை,தெற்கு: எட்வர்ட் ஜேக்கப் வீட்டுக்கு உயில் வழங்கப்பட்டது
கிழக்கு: ரூபன் சந்திரகுமார் வீட்டுக்கு உயில் வழங்கப்பட்டது
சொத்தின் பரப்பளவு 860 சதுர அடி
பொருள் எண்.3:மேற்கு:ஸ்டெல்லா ஆலிஸ் வீட்டுக்கு உயில் வழங்கப்பட்டது,வடக்கு:20 அடி கிழக்கு மேற்கு சாலை,தெற்கு: எட்வர்ட் ஜேக்கப் வீட்டுக்கு உயில் வழங்கப்பட்டது, கிழக்கு: கிரேசி செல்வகுமாரி வீட்டுக்கு உயில் வழங்கப்பட்டது
சொத்தின் பரப்பளவு 860 சதுர அடி, அனைத்து எளிதான வசதிகள் மற்றும் பாதை உரிமைகளுடன். வருவாய் பதிவேட்டின்படி தற்போதைய SF எண்.954/2B2

**கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி**

**திரு. வீராசாமி M**
**எண்.2/13 V O C நகர், 4வது தெரு வலையங்காடு குமார் நகர் திருப்பூர் -641603**
**திருமதி. தேவி க/பெ திரு. வீராசாமி M**
**எண்.2/13 V O C நகர், 4வது தெரு வலையங்காடு குமார் நகர் திருப்பூர் -641603**

**கோரிக்கை அறிவிப்பின்படி செலுத்த வேண்டிய தொகை**

ரூ. 33,57,172/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து ஐம்பத்தேழு ஆயிரத்து நூற்று எழுபத்திரண்டு மட்டும்) 10-09-2025 தேதியன்று, கடன் கணக்கு எண். SHLHTHPR0000696 இன் தொடர்பாக. மேலும் வட்டியுடன் குறிப்பிடப்பட்டுள்ள தற்செயலான செலவுகள், கட்டணங்கள் போன்றவை. கோரிக்கை அறிவிப்பு தேதி - 10.09.2025
கையக சுவாதீன தேதி- 22.09.2026

**அடமானச் சொத்தின் விவரம்**

அனைத்து துண்டு மற்றும் பகுதி திருப்பூர் பதிவு மாவட்டம், அவிநாசி துணைப்பதிவு மாவட்டம், அவிநாசி தாலுக்கா, எட்டிவீரம்பாளையம் கிராமம், SF எண்.375/16, மனை எண்.35-ல், 1764 சதுர அடி பரப்பளவில் நிலத்துடன் கூடிய கட்டிடத்துடன் சொத்து அமைந்துள்ளது.எல்லைகள் பின்வருமாறு:மேற்கு: மனை எண்.36, வடக்கு: மனை எண். 14, தெற்கு: கிழக்கு மேற்கு சாலை, கிழக்கு: மனை எண்.34,அனைத்து எளிதான வசதிகள் மற்றும் பாதை உரிமைகளுடன்.

**கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி**

**திரு. சுரேஷ்குமார் D, த/பெ துரை**
**எண் 17/E கணபதி லேஅவுட், KK புதூர் கோயம்புத்தூர் - 641038**
**திருமதி. லட்சுமி, க/பெ சுரேஷ்குமார்**
**எண் 17/E கணபதி லேஅவுட், KK புதூர் கோயம்புத்தூர் - 641038**

**கோரிக்கை அறிவிப்பின்படி செலுத்த வேண்டிய தொகை**

ரூ.1,10,68,215/- (ரூபாய் ஒரு கோடியே பத்து லட்சத்து அறுபத்து எட்டாயிரத்து இருநூற்று பதினைந்து மட்டும்) 06-11-2024 தேதியன்று, கடன் கணக்கு எண். SLPHCOIM0000777 இன் தொடர்பாக மேலும் வட்டியுடன் குறிப்பிடப்பட்டுள்ள தற்செயலான செலவுகள், கட்டணங்கள் போன்றவை.
கோரிக்கை அறிவிப்பு தேதி - 07.11.2024 கையக சுவாதீன தேதி- 23.09.2026

**அடமானச் சொத்தின் விவரம்**

அனைத்து துண்டு மற்றும் பகுதி கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் துணைப்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, சங்கனூர் கிராமம், SF எண். நிலத்துடன் கூடிய கட்டிடத்துடன் சொத்து அமைந்துள்ளது. இதன் எல்லைகள் பின்வருமாறு: மேற்கு: நாச்சிகோனார் நிலம், கிழக்கு: ராமசாமி முதலியார் நிலம், வடக்கு : குணவதியம்மாள் ஜகா, தெற்கு: 24 அடி அகலமுள்ள கிழக்கு மேற்கு சாலை. சொத்தின் மொத்த பரப்பளவு 1610 சதுர அடி அல்லது 3 ½ சென்ட்கள் 86 சதுர அடி அல்லது 149.58 சதுர மீட்டர் ஆகும். வருவாய் பதிவேட்டின்படி தற்போதைய T.S. எண். 164, வார்டு எண். Q (17), பிளாக் எண். 5. இச்சொத்து சின்னம்மாள் தெருவில் அனைத்து பயன்பாடுகள் மற்றும் வழித்தட உரிமைகளுடன் உள்ளது.

இடம்:கோயம்புத்தூர் & திருப்பூர் ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி-ட்ரூஹோம் நிதி லிமிடெட்
நாள்:21, 22, 23.09.2026 (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட் என அறியப்பட்டது)


# விரும்பிய சரக்கு இல்ல...

## கொதிக்கும் மது பிரியர்கள்

**நாகர்கோவில் செப். 25-** குமரி மாவட்டத்தில் விரும்பிய மது வகைகள் இல்லை என மது பிரியர்கள் மனக்குமுறலை வெளிப்படுத்தி உள்ளனர்.

த.வெ.க. அரசு பொறுப்பேற்ற நாளில் இருந்து டாஸ்மாக் கடைகளில், மாற்றம் என்ற பெயரில் பல்வேறு குளறுபடிகள் நடந்து வருகின்றன. கூடுதலாக ரூ.10 வசூலிக்க கூடாது என உத்தரவிட்ட பின்னரும், மாறாக பாட்டிலுக்கு ரூ.20 வரை வசூலிக்கப்பட்டது. டாஸ்மாக் கடைகளுக்கான அடிப்படை செலவுகளே கூடுதல் வசூலுக்கு காரணம் என கூறியதை தொடர்ந்து, டாஸ்மாக் கடைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் உயர்த்தியது.

மேலும், கடைகள் பராமரிப்பிற்கும் பணம் தருவதாக அறிவித்துள்ளது. இதனையடுத்து, பாட்டிலில் கூறப்பட்டுள்ள விலையை விட கூடுதல் பணம் வசூலித்தால் முதலில் சஸ்பெண்ட் நடவடிக்கையும், தொடர்ந்தால் பணி நீக்கமும் செய்யப்படுவதாக அறிவித்துள்ளது. இதனையடுத்து, டாஸ்மாக் கடைகளில் கூடுதல் பணம் வாங்குவது தற்போது குறைந்துள்ளது.

ஆனால், மதுபிரியர்களுக்கு விரும்பிய ரகங்கள் கிடைப்பது இல்லை. டாஸ்மாக் கடைகள் எண்ணிக்கை குறைப்பால், மது பாட்டில்கள் வாங்க நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கும் நிலை உள்ளது. நேரடி பணம், யுபிஐ பேமெண்ட் என தனித்தனி வரிசைகள் உள்ளன. குமரி மாவட்டத்தில், பெரும்பாலான டாஸ்மாக் கடைகளில் மது வகைகள் வாங்க நீண்ட வரிசையில் மது பிரியர்கள் நிற்கிறார்கள்.

பல கடைகளில் இரவு 9 மணிக்கு முன்னதாகவே சீக்கிரமாக மூடுவதுடன், இரவில் ஸ்டிக்கர்கள் ஒட்டாமல் அதற்கான ரூ.10ஐ வசூலிக்கின்றனர். பல கடைகளில், இரவில் யூபிஐ மூலம் பணம் பெற மறுக்கின்றனர். நாகர்கோவில் நகர பகுதிகளில் உள்ள சில கடைகளில் இதுபோன்ற நிலை உள்ளது. டாஸ்மாக் கடைகளில் கூட்டத்தில் வரிசையில் நின்று மது வாங்க சென்றால், மது பிரியர்கள் கேட்கும் ரகங்கள் இல்லை. இதனால், டாஸ்மாக் ஊழியர்களுடன் மது பிரியர்கள் தகராறு செய்யும் நிலை உள்ளது. எனவே இருப்பில் உள்ள மது வகைகளை மது பிரியர்கள் தெரிந்து கொள்ளும் வகையில், கடைகளில் டிஸ்பிளே வைக்கப்பட வேண்டும். இதன் மூலம் இந்த கடையில் என்னென்ன மது வகைகள் விற்பனைக்கு இருக்கிறது என்பது மது பிரியர்கள் தெரிந்து கொண்டு, தேவையில்லாமல் வரிசையில் நின்று காத்திருந்து ஏமாறுவதை தவிர்க்க முடியும் என மது பிரியர்கள் கூறி உள்ளனர்.


ஸ்ரீவைகுண்டம் சார்பு நீதிமன்றம்
இ.பி.எண் : 30/2025
இன்
அ.வ.எண்-120/2023
கிருஷ்ணன் ...மனுதாரர்/வாதி
எதிர்
ஷோபா, க/பெ.சுடலைமணி,
க.எண்:4/15, பழனியப்பதேவர் ரோடு,
சூலூர், சூலூர் போஸ்ட்,
கோயம்புத்தூர் மாவட்டம்
... 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி

மேற்படி மனுதாரர்/வாதி மேற்படி நிர் மனு தபசில் சொத்தை தங்களிடமிருந்து வாழ்விப்பு செய்து தரக்கேட்டு நிறைவேற்றுதல் மனு எண்:30/2025ல் மனுதாக்கல் செய்து ஷை மனுவில் தாங்கள் ஆஜராக 06.11.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.00 மணியளவில் தாங்கள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

திரு.A.ஜெயசிங்மதுரம், பி.எல்.
வழக்கறிஞர்
திருவைகுண்டம்-628601,
Cell: 9443528394.



**மாண்புமிகு முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோயமுத்தூர்**
I.A.No.10 OF 2026
O.S.No.414 OF 2012
1.N.தருன், 2.N.பிரேமலதா
...மனுதாரர்கள்
எதிராக
N.பிரவின், த/பெ.நந்தகோபால்,
கதவு எண்.16,UGFTNF நகர், ஒத்தக்கால் மண்டபம், கோயமுத்தூர்-641 032.
...5-ம் எதிர்மனுதாரர்

**பொது அறிவிப்பு**

மேற்படி மனுதாரர்கள் மேற்கண்ட நீதிமன்றத்தில் மேற்கண்ட எதிர்மனுதாரருக்கு எதிராக நீதிமன்ற தீர்ப்பாணையினை திருத்தம் செய்யக்கோரி தாக்கல் செய்த வழக்கு வருகின்ற 13.10.2026-ம் தேதி மேற்படி எதிர்மனுதாரர் காலை 10.30 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது. அவ்வாறு ஆஜராக தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்சமாக நீதிமன்றத்தால் உத்தரவு வழங்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**G.விவேகாகுருபரன்,** BA.,BL.,LLM(UK)
வழக்கறிஞர்,
கோயமுத்தூர்-641 018.


பாப்பாரப்பட்டியில் மாணவிக்கு ஆபாச மெசேஜ்

# அரசு பள்ளி ஆசிரியர் போக்சோவில் கைது

## கடும் எதிர்ப்பு கிளம்பியதால் புகாரை பெற்று நடவடிக்கை

**பாப்பாரப்பட்டி, செப். 25-** பாப்பாரப்பட்டி அருகே வாட்ஸ் அப்பில் மெசேஜ் அனுப்பி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த கணித ஆசிரியர் போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்டார்.

தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி அருகே உள்ள பாலவாடி அரசு உயர்நிலைப்பள்ளியில் கணித ஆசிரியராக பாப்பாரப்பட்டி போலீஸ் காலனியைச் சேர்ந்த தங்கவேல் (47) என்பவர் பணியாற்றி வருகிறார். இவர் 10ம் வகுப்பு படித்து வரும் மாணவி ஒருவரின் வாட்ஸ்அப்புக்கு மெசேஜ் அனுப்பி, பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். இதுகுறித்து, மாணவி தனது பெற்றோரிடம் கூறவே, அவர்கள் பள்ளி தலைமை ஆசிரியர் சிவகுமாரிடம் புகார் தெரிவித்தனர். இதையடுத்து அவர் பாப்பாரப்பட்டி போலீசில் புகாரளித்தார். தொடர்ந்து போலீசார் ஆசிரியர் தங்கவேலை, காவல் நிலையத்திற்கு அழைத்து சென்ற விசாரித்தனர். ஆனால், மாணவியின் பெற்றோர் புகார் தர மறுத்த நிலையில், ஆசிரியர் விடுவிக்கப்பட்டார்.

### பிறந்த நாள் பரிசு வழங்கி வலை

ஆசிரியர் தங்கவேலு மாணவியின் பிறந்த நாளுக்கு சமீபத்தில் பரிசு ஒன்றை வாங்கி கொடுத்துள்ளார். அதை தொடர்ந்து மாணவியிடம் தொடர்ந்து பேசி வந்துள்ளார். ஆபாச மெசேஜ் அனுப்பி மாணவிக்கு வலை விரித்துள்ளது விசாரணையில் தெரிய வந்துள்ளது. மேலும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஆசிரியர் தங்கவேலு பாலக்கோட்டில் பணியாற்றிய பள்ளி ஒன்றிலும் இதேபோல பாலியல் தொடர்பான புகாரில் சிக்கினார். ஆனால், அங்கு ‘வழங்க வேண்டியதை வழங்கி’ சரிகட்ட அந்த சர்ச்சையை சமரசமாக்கியதும் தெரிவந்துள்ளது.

இந்நிலையில் நேற்று மனித உரிமை அமைப்பினர், தன்னார்வலர்கள், ‘ஒழுங்கீனம் தொடர்பாக குற்றச்சாட்டு எழுந்த ஆசிரியர் எவ்வாறு பணியில் இருக்கலாம்’ என கூறி பள்ளிமுன் திரண்டனர். பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோரும் வந்திருந்தனர். இதுதொடர்பாக தலைமை ஆசிரியருடன் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதுகுறித்து தகவல் அறிந்த பாப்பாரப்பட்டி இன்ஸ்பெக்டர் ரவுத்திரி வெங்கடேஷ் தலைமையிலான போலீசார் பள்ளிக்கு விரைந்து வந்து, ஆசிரியர் தங்கவேலை மீட்டு காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இந்நிலையில் நேற்று இரவு பாதிக்கப்பட்ட மாணவி ஆசிரியர் மீது புகார் வழங்கினார். இதைத்தொடர்ந்து பென்னாகரம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் ஆசிரியர் தங்கவேல் மீது போக்சோ வழக்குப்பதிவு செய்தனர். இன்று காலை அவரை அதிரடியாக கைது செய்தனர்.


**FORM A**
**பொது அறிவிப்பு**
[Regulation 14 of the Insolvency and Bankruptcy Board of India (Voluntary Liquidation Process) Regulation 2017]

**செல்வா ஹெர்பல்ஸ் லிமிடெட்**
**பங்குதாரர்களின் (STAKEHOLDERS) கவனத்திற்கு**

| | | |
|---|---|---|
| 1. | நிறுவனத்தின் பெயர் | செல்வா ஹெர்பல்ஸ் லிமிடெட் |
| 2. | நிறுவனம் பதிவு செய்யப்பட்ட தேதி | 08.04.2002 |
| 3. | பதிவாளர் | நிறுவனங்கள் பதிவாளர், கோயமுத்தூர் |
| 4. | நிறுவனத்தின் அடையாள எண்.(CIN) | U51100TZ2002PLC010141 |
| 5. | பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | S F No:348/3. கரடிமடை, மத்திபாளையம் (PO), கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா - 641010. |
| 6. | நிறுவன கலைப்பு (Liquidation) தொடங்கிய நாள் | **23.09.2026** |
| 7. | நிறுவன கலைப்பாளர் (Liquidator) பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் பதிவு எண். | வாசுதேவன் கோபு<br>முகவரி : ஜி.வி.என்கிளேவ், 18/30, ரமணி வீதி, கே.கே.புதூர், சாய்பாபாகாலனி, (4வது வலது ரோடு, சாய்பாபாகாலனி ஹோட்டல் அன்னபூர்ணா சாலைக்கு எதிரில்) கோவை - 641038. தமிழ்நாடு. இந்தியா<br>vasudevangopu.ip@gmail.com;<br>vasudevanacs@gmail.com<br>தொலைபேசி : 0422-4347063<br>பதிவு எண் : IBBI/IPA-002/IP-N00291/2017-18/10849 |
| 8. | ஆதாரங்களை சமர்ப்பிக்க இறுதி நாள் | **23.10.2026** |

செல்வா ஹெர்பல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவன சுய கலைப்பிற்கான (voluntary liquidation) தீர்மானம் பங்குதாரர்களால் **23.09.2026** அன்று நிறைவேற்றப்பட்டது.
எனவே செல்வா ஹெர்பல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பங்குதாரர்கள் (stakeholders) தங்களுக்கு நிறுவனத்திடம் இருந்து ஏதேனும் தொகை செலுத்தப்படாமல் இருந்தால் அதற்கான ஆதாரத்துடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள (Item No.7) நிறுவன கலைப்பாளர் (Liquidator) முகவரிக்கு **23.10.2026** தேதிக்குள் சமர்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
நிதி கடன் வழங்கியோர் (financial creditors) கடன் ஆதாரங்களை ஏதேனும் மின்னணு தொடர்பு மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும். இதர பங்குதாரர்கள் மின்னணு அல்லது அஞ்சல் தொடர்பு மூலம் அனுப்பலாம்.
தவறான அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய கோரிக்கை சான்றுகளை சமர்ப்பிப்பது அபராதத்திற்கு உட்படுத்தப்படும்.

வாசுதேவன் கோபு
செல்வா ஹெர்பல்ஸ் லிமிடெட் கலைப்பாளர்
25.09.2026 பதிவு எண். IBBI/IPA-002/IP-N00291/2017-18/10849
கோயமுத்தூர் AFA No: AA2/10849/02/300627/204281 valid till 30.06.2027